Vol. 8 No. 2 January 2024 E-ISSN: 2456-5571

# முல்லைத்திணைப் பாடிய பெண்பாற் புலவர்களும் பாடுபொருள் வெளிப்படுத்தும் முறையும்

**முனைவர் க. சிங்காரவேலு**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்*

**க. ராஜ்குமார்**
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்*

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க அக இலக்கியங்களில் திணைசார் வாழ்வியல் என்பது ஐந்து நிலங்களில் பரவி வாழ்ந்த மக்களின் வாழ்வியலைக் குறிப்பிடுகிறது. ஐந்திணை மக்களின் வாழ்வியலில் முல்லைத்திணை மக்களின் வாழ்வியல் தனித்த சிறப்பினையுடையதாக அமைகிறது. முல்லைத்திணைப் பாடல்களைப் பாடிய பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களின் வழியாக முல்லைத்திணையின் பாடுபொருளான இருத்தல் கோட்பாடு வெளிப்படுகிறது. முல்லைத்திணைப் பாடல்களைப்பாடிய பெண்பாற் புலவர்களின்பாடுபொருளையும்பாடுபொருள்வெளிப்படுத்தும்முறையையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *இருத்தல், இயற்கைக்காரணிகள், புறச்சூழல்கள், கேள்வியெழுப்புதல், தன்னிலை உயர்ச்சி*

**முன்னுரை**

சங்க கால சமூகத்தில் பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதற்கு சங்க இலக்கிய பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் தக்க சான்றாக அமைகிறது. புலவர்கள் சமூகத்தில் நிகழும் நிகழ்வையும் வரலாற்றையும் தமது கற்பனைத் திறத்துடன் பாடி நம் தமிழ்ச்சமூக வரலாற்றிற்கு உரிய சான்றுகளை வழங்கிய வரலாற்றறிஞர்கள் என்றால் அது மிகையாகாது. அக இலக்கியம் மனிதர்களின் உணர்வுகளை பிரதிபலிப்பவை. திணை இலக்கியங்களில் முல்லைத்திணை மனித உணர்வுகளை துல்லியமாக எடுத்துரைப்பவையாகும். சங்க அக இலக்கிய முல்லைத்திணைப் பாடல்கள் பாடிய பெண்பாற் புலவர்களையும் அவர்கள் பாடிய பாடலின் மையக்கருவை அறிவது பண்டை மக்களின் உணர்வுசார் கொள்கைகளை அறிவதற்கு பெருந்துணைப்புரிகின்றன. முல்லைத்திணைப் பாடிய பெண்பாற்புலவர்களின் பாடுபொருளையும் பாடுபொருள் வெளிப்படும் முறையையும் ஆராய்ந்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**முல்லைத்திணைபாடிய பெண்பாற்புலவர்கள்**

முல்லைத்திணைப்பாடல்களாக அக இலக்கியங்கள் குறிப்பிடும் 234 பாடல்களில் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் பதினாறு (16) ஆகும். பதினாறு (16) பாடல்களை ஏழு (7) பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர். (வரிசை பின்வருமாறு)

1. ஒக்கூர் மாசாத்தியார்
2. ஔவையார்
3. கச்சிப்பேட்டுநன்னாகையார்
4. கழார்க்கீரன்எயிற்றியார்
5. காக்கைப்பாடினியார்நச்செள்ளையார்
6. மதுரைக்காமக்கனிநப்பாலத்தனார்
7. பொன்மணியார்

ஆகிய ஏழு பெண்பாற் புலவர்கள் முல்லைத்திணைப் பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்கள் பிற திணைகளில் பாடல்களைப் பாடியிருந்தாலும் முல்லைத்திணையில் பாடிய பாடல்கள் பொருட்செறிவு மிகுந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இப்பெண்பாற் புலவர்களையும் அவர்கள் பாடிய பாடல்களின் பாடுபொருளையும், பாடுபொருள் வெளிப்படும் விதத்தினையும் காண்போம்.

**முல்லைத்திணையும் பாடுபொருளும்**

முல்லைத்திணை காடும் காடு சார்ந்த பகுதியையும் அப்பகுதியில் வாழும் மக்களின் இயல்புகளையும் சேர்ந்து வெளிப்படுத்தும் கூட்டுத்தொகுதி ஆகும். இயற்கைக் காட்சியமைப்பு காட்டின் எழில், கார்க்கால மழைப்பொழிவு கூதிர்கால இயல்புகள், என்று முல்லைநிலத்தின் காட்சிநிலை வடிவமைக்கப்பட்டிருக்கும் முல்லைத்திணை உள்ளத்தால் ஒன்றிணைந்த காதலர்களின் ஆற்றியிருக்கும் தன்மையாகிய 'இருத்தல்' பாடுபொருளாகக்கொண்டதாகும்

**பாடுபொருள்வெளிப்படும்முறை**

பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களில் பாடுபொருள் வெளிப்படும்முறையானது,

1. இயற்கைக் காரணிகளைக் கொண்டு பாடுபொருளை வெளிப்படுத்துதல் (அல்லது) தன்னைக் காட்டிலும் பிற உயிர்கள் வலிமை மிகுந்திருந்தமையைக் கூறி பாடுபொருளைவெளிப்படுத்துதல்
2. புற சூழல்களை தமது மன எண்ணங்களுடன் பொருத்தி பார்த்தல்மூலமாக பாடுபொருளை வெளிப்படுத்தல்
3. பிறர் உரையாடல்வழிபாடுபொருளைவெளிப்படுத்துதல்
4. கேள்வியெழுப்புதலின்வழி பாடுபொருளை வெளிப்படுத்துதல்
5. தன்னிலை உயர்ச்சிவழி பாடுபொருள்வெளிப்படுத்தல்

**இயற்கைக்காரணிகள்வழியாக பாடுபொருள்வெளிப்படுதல்**

ஒக்கூர் மாசாத்தியார் பாடிய குறுந்தொகை 126 வது பாடலில் கார்க்காலத்தில் திரும்பி வருவதாக உரைத்த தலைவன் தான் குறித்துச் சென்ற பருவம் வந்த பிறகும் வராமையால் தலைவி வருந்துகிறாள். தனது வருத்த நிலையை தோழிக்கு எடுத்துரைக்கிறாள் இதனை,

**"இளமை பாரார் வளநசைஇச்சென்றோர்**
**இவணும் வாரார் எவண ரோவெனப்**
**பெயல்புறந்தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகைஇலங்கெயிறாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே."**

**(குறுந்தொகை126)**

தலைவன் தலைவியின் இளமையின் அருமையை எண்ணிப்பாராமல் பொருள் ஈட்டுவதிலேயே வேட்கை கொண்டமையாலும் பிரிந்த தலைவன் திரும்பாமையாலும் தலைவி தலைவன் வருவதாக குறித்த கார்க்காலம் தன்னைப் பார்த்து நகைப்பதாகக் குறிப்பிட்டு தலைவியின் வருத்தத்தை ஒக்கூர் மாசாத்தியார்குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் பாடுபொருள் தலைவன் பிரிவினால் வருந்தும் தலைவியின் நிலை.ஆகையால் வலிமையற்ற தன்னை கார்க்காலம் தன்னை நகைப்பதாகக் குறிப்பிடுவது தலைவி தன் இயல்பை குறிப்பிடும் பொருட்டாகும்

ஒக்கூர்மாசாத்தியார் பாடிய குறுந்தொகை 186 வது பாடலில் தலைவனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவி தனது வருத்த நிலையைப் பதிவு செய்வதாக அமைந்துள்ளது.

**"ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த**
**கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி**
**எயிறுஎன முகைக்கும் நாடற்குத்துயில்**
**துறந்தனவால் தோழி என் கண்ணே"**

**(குறுந்தொகை186)**

தலைவனின் பிரிவால் வருந்துகிறாள். தலைவனை எண்ணி தலைவி தன் உறக்கத்தை இழந்தக் காரணத்தைக் குறிப்பிடுகிறார். இப்பாடலின் பாடுபொருள் தலைவியின் வருத்தத்தை வெளிப்படுத்துவதாகும்

இயற்கைக் கருப்பொருளாகிய முல்லை மலர் தன்னை நகைப்பதாகக் கூறி தனது வலிமையற்ற நிலையை எடுத்துரைக்க தலைவியைக் காட்டிலும் வலிமையுடையதாக முல்லைக் கொடியைப் புலவர் பயன்படுத்துகிறார்

ஒக்கூர்மாசாத்தியார் பாடிய குறுந்தொகை 220வது பாடலில், பொருள் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்ட தலைவன் திரும்பி வராமையால் வருந்தும் தலைவியின் வருத்தநிலை இப்பாடலின் பாடுபொருளாக அமைகின்றது.

**"இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை**
**வெருகுசிரித்தன்ன பசுவீ மென்பிணி**
**குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்**
**வண்டுசூழ் மாலையும் வாரார்**
**கண்டிசிற் றோழி பொருட்பிரிந்தோரே"**

**(குறுந்தொகை220.6-7)**

குறித்த பருவத்தில் வரத் தவறிய தலைவனின் செயலை எண்ணி வருந்தும் தலைவியை முல்லைக்கொடியானதுபார்த்து நகைப்பது காட்டுப்பூனை சிரிப்பதைப் போன்று உள்ளது தலைவன் தான் திரும்பி வருவதாகக் குறிப்பிட்ட கார்க்காலத்திற்குரிய பொழுதான மாலைப்பொழுதில் கூட தலைவன் பொருளீட்டும் நோக்குடன் திரும்பி வராமையால் வருந்துகிறாள்தலைவி.

ஔவையார் பாடிய நற்றிணை 371வது பாடலில், தலைவன் குறித்த கார்ப்பருவம்துவங்கியதை அறிந்த தலைவன் பாகனிடம்உரைப்பதாகஅமைந்த இப்பாடலில்,

**“மாயோள்இருந்த தேஎம் நோக்கி**
**வியல் இருவிசும்பு அகம்புதையப்பாஅய்**
**பெயல் தொடங்கினவேபெய்யா வானம்**
**நிழல் திகழ்சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி**
**அழல் தொடங்கினளேஆயிழை அதன்எதிர்**
**குழல் தொடங்கினரேகோவலர்**
**தழங்கு குரல் உருமின் கங்குலானே” (நற்.371)**

தலைவியின் வருத்தம் துவங்கும்படியாக மழை பெய்யத் துவங்கிவிட்டது தலைவியின் துன்பத்தை மேலும் மிகுவிக்கும்படியாக, கோவலர்கள் தங்கள் புல்லாங்குழலை இசைக்க துவங்கியிருப்பர்என தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவன் தனது மனம் தலைவியையும் அவளது உள்ளக்கிடக்கையையும் தனது வருகையையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்நிலையையும்எடுத்துரைப்பதாகஅமைகிறது.

இப்பாடலின் பாடுபொருளானது இயற்கைக் காரணியாகிய கார்க்கால மழையுடன் சேர்ந்து கோவலரின் இசை வழியாக வெளிப்படும் தலைவியின் நிலையை எண்ணி வருத்தமுறும்தலைவனின்மனதை வெளிப்படுத்துவதாகும்

கச்சிப்பேட்டு நன்னாகையாரின் குறுந்தொகை 287வது பாடலில், தலைவன் குறிப்பிட்ட கார்க்கால நிகழ்வைக் குறிப்பிட்டு தனது ஆற்றியிருக்கும் தன்மையை வெளிப்படுத்துவதாக,

**“அம்ம வாழி தோழி காதலர்**
**இன்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ**
**முந்நாற் றிங்க ணிறைபொறுத்தசை,**
**ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்**
**கடுஞ்சூல் மகளிர் போலநீர் கொண்டு**
**விசும்பிவர்கல்லாது தாங்குபு புணரிச்**
**செழும்பல் குன்றம் நோக்கிப்**
**பெருங்கலி வான மேர்தரும்பொழுதே” (குறுந்.287)**

தலைவன் குறிப்பிட்ட கார்ப்பருவ வரவைக் குறிப்பிடும்பொருட்டு மழைமேகம் புலவரால் பயன்படுத்தப்பட்டுள்ளது தலைவன் பிரிந்த காலம் நீண்டுகொண்டே சென்றமையால் ‘கடுஞ்சூல் மகளிர்’ என்று தலைவன் பிரிந்த காலத்தை இதனுடன் ஒப்புமைப்படுத்திக் கூறுகிறார்.

இப்பாடலின் பாடுபொருளானதுதலைவனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தலைவியின் ஆற்றியிருக்கும்ஒழுக்கம் விளக்கப்படுகிறது

காக்கைக் கரைதலைக் கொண்டு நன்னிமித்தத்தை அறிவித்துதோழி தலைவியை ஆற்றுவிப்பதை

**“திண்டேர் நள்ளி கானத் தண்டர்**
**பல்லாப் பயந்த நெய்யிற் றொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ**
**றெழுகலத் தேந்தினுஞ்சிறிதென் றோழி**
**பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே”**
**(குறுந்.210)**

தலைவனது பிரிவால் வாடும் தலைவியின் நிலை உணர்ந்த காக்கை கரைவதை அறிவுறுத்துகிறாள் காக்கை கரைவதால் விருந்தினர் வருவர் விருந்தளிக்க உரிமையான தலைவன் வருவார் என்பதைக் குறிப்பால்உணர்த்துகிறாள்.

தலைவியை ஆற்றுவிக்க தோழி கையாளும் உத்தியாகக் கொண்டாலும் திணைக்குரிய கருப்பொருளை திணையின் உரிப்பொருளான ஆற்றியிருத்தலை வெளிப்படுத்த கருவியாக அமைகின்றது.

தலைவன் குறிப்பிட்ட காலத்தில் வராததால் தோழி தலைவியின் நிலையை எண்ணி வருந்துகிறாள். தலைவி தோழியிடம்உரைப்பதாக,

**“வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்**
**கையற வந்த பையுள் மாலைப்**
**பூஞ்சினை யிருந்த போழ்கண் மஞ்ஞை**
**தாஅம் நீர் நனந்தலை புலம்பக்**
**கூஉந் தோழி பெரும்பே தையவே” (குறுந்.391)**

தன்னை வருத்தும் கார்க்காலத்தின் மாலைப்பொழுதின் சூழலும் மயில்களின் செயல்களையும் காலத்தை பிரித்து அறிய இயலாத அவைகள் அறிவற்றவை என்று தலைவி தோழிக்கு எடுத்துரைக்கிறாள்

ஒருவகையில் கருப்பொருள்களை ஏற்றிக்கூறுவதென்பது (அறிவற்றவை என்று கூறுவது) தன்னைத்தானே ஆற்றுவிக்க தலைவி கடைபிடிக்கும் முறையாக பொன்மனியார் குறிப்பிடுகிறார்.

**புறச்சூழல்களுடன்மன எண்ணங்களோடுப்பொருத்திப்பார்த்து பாடுபொருளைவெளிப்படுத்துதல்**

குறுந்தொகை 275வது பாடலில், தலைவனின் வருகையை அறிய விருப்பமுடைய தலைவி தனது தோழியிடம் உரைப்பதாகஅமைந்த இ;ப்பாடலில்,

**"புல்லார் நல்லாண் பூண்மணி கொல்லோ**
**செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு**
**வல்வில் இளையர் பக்கம் போற்ற**
**ஈர்மணற் காட்டாறு வரூஉம்**
**தேர்மணி கொல்லாண்டியம்பிய வுளவே" (குறுந்.275)**

மாலைக்காலத்தில் ஊர் வந்து சேர்ந்த காளையினை உடைய பசுவினத்தில் உள்ள நல்ல பசுக்களின் கழுத்தில் கட்டப்படும் மணியின் ஒலியா?அல்லது செய்வினையை செய்துமுடித்த தலைவனின் தேரின் மணியோசையா? என்று தனது மனம் தலைவனின் வருகையை மட்டுமே எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பதை தலைவி தோழியிடம் எடுத்துரைக்கிறாள்

தன்னைச் சுற்றி நிகழும் அனைத்து நிகழ்வுகளும் தலைவனின் வருகையை உணர்த்தும் காரணியாக (மணி ஓசை) இருப்பது தலைவி தலைவன் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துவதாகும்

**பிறர் உரையாடல்வழி பாடுபொருள்வெளிப்படுதல்**

குறுந்தொகை 394வது பாடலில், தலைவனின் அன்பினை விளக்கும் விதமாக,

**"பெய்ம் மணி ஆர்க்கும் இழைகிளர்நெடுந்தேர்**
**வன்பரல் முரம்பின் நேமி அதிர**
**சென்றிசின்வாழியோ பனிக்கடு நாளே**
**இடைச்சுரத்துஎழிலி உறைத்தெனமார்பின்**
**குறும் பொறிக் கொண்டசாந்தமொடு**
**நறுந் தண்ணியன்கொல்நோகோயானே?" (நற்.394)**

தலைவியைப் பிரிந்த தலைவன் தான் குறித்த கார்ப்பருவ வரவை அறிந்து வேகமாக திரும்பி வருகிறான். தலைவிமீது அன்பு கொண்டு திரும்பி வந்த தலைவனை இடைச்சுரத்துக் கண்டோர் கூறியதாக இப்பாடல் அமைகிறது.இதன்வழி தலைவனுடையஉள்ளக்கிடக்கைவெளிப்படுகிறது

தலைவன் தலைவியை காண விரும்புவதை தேர் முன்பு தலைவியை பிரிந்தபோது சென்றதையும் தற்போது தலைவியைக் காண தலைவனின் தேர் வேகமாக திரும்பியதையும் காணும் இடைச்சுரத்துக் கண்டோர் கூற்றின்வழி தலைவியின் ஆற்றாமையைத் தீர்க்க எண்ணும் தலைவனின் மனவுணர்வை வெளிப்படுத்துவதாகஇப்பாடலின் பாடுபொருள்அமைந்துள்ளது.

குறுந்தொகை 99வது பாடலில், தலைவியைப் பிரிந்த நேரத்தில்தலைவியை நினைத்தீரோவெனதோழி தலைவனைக் கேட்கிறாள். தலைவன் அதற்கு தலைவியை மட்டுமே எண்ணிக்கொண்டிருந்ததாகபதிலுரைக்கிறான்

**"உள்ளினென் அல்லனோ யானே உள்ளி**
**நினைத்தனென் அல்லனோ பெரிதே நினைத்து**
**மருண்டனென் அல்லனோ உலகத்துப் பண்பே**
**நீடிய மராஅத்த கோடுதோய் மலிர்நிறை**
**இறைத்துணச்சென்றற் றாஅங்கு**
**அனைப்பெருங்காமம் மீண்டுகடைக்கொளவே"**
**(குறுந்.99)**

தனது மனம் தலைவியை மட்டுமே எண்ணிக்கொண்டிருந்ததை தலைவன் வெளிப்படுத்த வெள்ளத்தின்அளவைக் குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் தலைவனின் அன்பையே பாடுபொருளாகக் கொண்டு தலைவனின் மனவுணர்வை பெருகியோடும் வெள்ளத்தின் அளவுகளை குறிப்பிட்டு இறுதியில் காணாமற்போவதைப்போன்று காமநோயானது தலைவன் வருகையால் காணாமற்போகின்றது என்பதைக் குறிப்பிட புலவர்வெள்ளத்தின் அளவை உயர்ந்த மரத்தின் கிளையைத்தொட்டு ஓடுவதையும், பின்பு கையால் நீரை இறைக்கும் அளவிற்கு வற்றியதையும், இறுதியாக காணாமற்போவதையும் குறிப்பிடுகிறார்.

**கேள்வியெழுப்புதலின்வழிபாடுபொருளைவெளிப்படுத்துதல்**

அகநானூறு 384வது பாடலில், தலைவன் வினைமுற்றி மீள்கிறான். அதனைக் கண்ட உழையர்கள் தலைவன் தலைவிமீது கொண்ட அன்பின் திறத்தைப் போற்றியரைக்கும் விதமாக,

**"வான் வழங்கு இயற்கை வளி பூட்டினையோ?**

**மான்உரு ஆகநின் மனம் பூட்டினையோ?"**

**(அகம்.384)**

தலைவியைக் காணும்பொருட்டு தேரில் குதிரைக்கு பதிலாக காற்றைப் பூட்டினாயோ? அல்லது உனது மனத்தையே பூட்டினாயோ? என்று தலைவனது வருகையை உழையர் கூறும் விதத்திலிருந்துதலைவனது உள்ளக்கிடக்கைவெளிப்படுகிறது

நற்றிணை 381வது பாடலில், தலைவனது பிரிவால் வருந்தும்தலைவி தனது ஆற்றாமையைவெளிப்படுத்துவதை

**"அருந்துயர் உழத்தலின் உண்மை சான்ம்எனப்**

**பெரும்பிறிது இன்மையின் இலேனும் அல்லேன்**

**கரை பொருது இழிதரும் கான்யாற்று இகுகரை**

**வேர்கிளர் மராஅத்து அம்தளிர் போல**

**நடுங்கல் ஆனா நெஞ்சமொடுஇடும்பை**

**யாங்கனம்தாங்குவென் மற்றே? ஓங்குசெலல்**

**கடும் பகட்டு யானை நெடுமான் அஞ்சி**

**ஈரநெஞ்சமொடுஇசை சேண் விளங்க**

**தேர் வீசு இருக்கை போல**

**மாரி இரிஇ மான்றன்றால்மழையே" (நற்.381.)**

தலைவி தலைவன் மீது தான் கொண்ட அன்பு உண்மையானால் இப்பிரிவுத்துயரில் உழலும் தான் இந்நேரம் இறந்திருக்க வேண்டும். அவ்வாறு இறவாமையால் தலைவன்மீது தான் கொண்ட அன்பு உண்மை இல்லையோ? என்றெண்ணி வருந்துகிறாள். மேலும், தன் நிலையை கரையை மோதி ஓடுகின்ற ஆற்றில் இடிகரையில் வேர்களெல்லாம் அலசப்பட்டு தோன்றிக் காற்றால் அலையும் மாமரத்தின் தளிரைப்போன்று நடுங்கும் என் நெஞ்சத்தில் நீங்காத இத்துன்பத்தை எவ்வாறு தாங்குவேன்? என்று தலைவி தனது நிலைப்பாட்டைவெளிப்படுத்துகிறாள்

தலைவி தனது கேள்வியெழுப்பும் முறையால் பாடுபொருளாகிய ஆற்றாமையை வெளிப்படுத்துவதை இதன்வழி அறியலாம்.

குறுந்தொகை 183வது பாடலில், தலைவி தனது தோழியிடம் தலைவன் கார்க்கால நிகழ்வுகள் கண்டு திரும்பி வருவார் என்று உரைப்பதை,

**"சென்ற நாட்ட கொன்றையம்பசுவீ**

**நம்போற் பசக்குங் காலைத்தம்போற்**

**சிறுதலைப் பிணையிற் றீர்த்த நெறிகோட்**

**டிரலை மானையுங் காண்பர்கொல்நமரே**

**புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை**

**மென்மயில் எருத்தில் தோன்றும்**

**கான வைப்பிற் புன்புலத் தானே" (குறுந்.183)**

தலைவனது பிரிவால் தனது வருத்த நிலையை தலைவி கூறுகிறாள்.மேலும், தலைவன் தான் குறித்த கார்க்காலத்திற்குரிய நிகழ்வுகள் காண்பதால் தான் வருந்துவதைப் போன்று தலைவனும் அக்கார்க்கால நிகழ்வுகளைக் காண்பாரோ?என்று தலைவி தனது மனதின் ஆற்றாமையைக்குறிப்பிடுகிறாள்

கேள்வியெழுப்புதலின் வழியும் புறச்சூழல்களின் துணையுடனும் இப்பாடலின் பாடுபொருள் தலைவியின் கூற்றின் வாயிலாகவெளிப்படுகிறது

போர் காரணமாக தலைவன் தலைவியைப் பிரிகிறான். தலைவனைப் பிரிந்த துயரத்தில் தனது துயரத்தை வெளிப்படுத்துவதாக,

**"காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்**

**நீர்வார் கண்ணின் கருவிளை மலர**

**துய்த்தலைப் பூவின்புதல் இவர் ஈங்கை**

**நெய்த் தோய்த்தன்னநீர் நனை அம்தளிர்**

**இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர**

**காய் சின வேந்தன் பாசறை நீடி**

**நம் நோய் அறியா அறனிலாளர்**

**இந்நிலை களைய வருகுவர்கொல்? என**

**ஆனாது எறிதரும் வாடையொடு**

**நோனேன் தோழி! என் தனிமையானே"**

**(அகம்.294)**

கணவனை இழந்த மகளிர் கண்களில் நீர் வடியும்படியாக கருவிளை மலர்களில் வழியாக பனித்துளிகள் வடிகின்றன. தலைவன் குறித்த கார்ப்பருவம் முடிந்து பனிக்காலம் துவங்கிய

இப்பிரிவுச் சூழலை புலவர் குறிப்பிடுகிறார். மேலும் தன்னுடைய நிலையை அறியாமல் பிரிவை இன்னும் நீட்டிக்கும் தலைவனை அறம் இல்லாதவர் எப்போதுதான் வருவார்? என்று குறிப்பிடுவதையும் வாடைக்காற்றின் துயரில் தனிமையில் தான் வருந்துவதையும் அறிய முடிகிறது.

பிரிவுத்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்நிலையை களைவதற்கு தலைவன் எப்போது வருவார்? என கேள்வியெழுப்புவதின் வழியாகவும், வாடைக்காற்றின் இயல்பினால் தன்னை வருத்துவதால் தன்னுடைய ஆற்றாமையை வெளிப்படுத்துவதாக கழார்க்கீரன் எயிற்றியார் பாடுபொருளைக் கட்டமைத்துள்ளார்.

**தன்னிலை உயர்ச்சி வழி பாடுபொருள் வெளிப்படுத்தல்**

அகநானூறு 324வது பாடலில், தலைவனின் வருகையை அறிந்து உழையர் தலைவனின் வருகையால் தலைவி விருந்தளிக்கும் வாய்ப்பைப் பெற்றதையும், இனி இருவரும் இணைந்து மகிழ்வர் என்பதை,

**“விருந்தும் பெறுகுநள் போலும், திருந்து இழைத்**
**தடமென் பணைத் தோள் மடமொழி அரிவை”**
**(அகம்.324)**

என்று தலைவியைக் குறிப்பிடுவதின் வழி உழையர்கள் தலைவன் பிரிந்திருந்த காலத்தில் விருந்தளிக்கும் வாய்ப்பை இழந்தாள். தலைவன் திரும்பியமையால் மீண்டும் விருந்தளிக்கும் வாய்ப்பைப் பெறுகிறாள். இனி இருவரும் மகிழ்ந்திருப்பர் என்பதை உழையர் கூற்றின்வழி மாசாத்தியார் குறிப்பிடுகிறார்.

கணவனைப் பிரிந்து இருக்கும் மகளிர் விருந்தளிக்கும் தன்மையை இழந்தவர்கள் ஆகின்றனர். தலைவன் பிரிந்த வருத்தத்துடன் விருந்தளிக்க முடியாத சூழலும் தலைவிக்கு துயர் விளைவிப்பதாக அமையும். பாடுபொருள் வெளிப்படும் முறையானது விருந்து அளிக்கும் வாய்ப்பைப் பெற்றாள் என்பதை தலைவன் மீண்டும் திரும்பினார் என்று புலவர் குறிப்பிடுவதை இதன்வழி அறிய முடிகிறது.

தலைவன் போர்வயிற் பிரிவு காரணமாக தலைவியைப் பிரிகிறான். வினை முற்றுப்பெற்றமையால் மீள்கிறான். தலைவி மீது கொண்ட அன்பின் காரணமாக பாகனை தேரை விரைந்து செலுத்த கூறுவதை,

**“செல்க பாக நின் நல் வினை நெடுந்தேர்**
**வெண்ணெல் அரிநர் மடி வாய்த் தண்ணுமை**
**பல்மலர்ப் பொய்கைப் படுபுள் ஒப்பும்**
**காய் நெல் படப்பை வாணன் சிறுகுடித்**
**தண்டலை கமழும் கூந்தல்**
**ஒண் தொடி மடந்தை தோள் இணை பெறவே” (அகம்.204)**

தலைவன் பாகனின் செயலைக் குறிப்பிடும்போது “நின் நல் வினை நெடுந்தேர்” என்றே குறிப்பிடுகிறான் தன்னை தலைவியிடம் கொண்டு சேர்க்கும் நல் வினையை செய்யும் தேர்ப்பாகனைக் குறிப்பிடுவதனை அறியலாம். தலைவன் தலைவியிடம் திரும்பும்போது அவ்வழியின் சூழல் தலைவனால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது

தலைவியின் ஆற்றாமையை போக்குவதற்காக தேரினை விரைந்து செலுத்த கூறுமிடத்து தலைவி ஆற்றியிருக்கும் தன்மையும் தலைவன் ஆற்றியிருக்கும் தன்மையை அறிந்து அதனை போக்க எண்ணுவதையும் அறிய முடிகிறது. மேலும் இதுவரை தனது கடமைக்காக தேரினை செலுத்திய பாகனை இதற்கு பின்பு நல்ல வினையை செய்யும் பாகனே என்று குறிப்பிட்டதினால் பாகன் தன்னிலை உயர்வு பெறுகிறான். (போர் வினையில் தேரினை செலுத்தவதிலிருந்து தலைவியைக் காண்பதற்கு தேரினை செலுத்துவதால் நல்ல வினை செய்யும் பாகன் என்ற சிறப்பை அடைதல்) தன்னிலை உயர்வு வெளிப்படுவதின் வழி இப்பாடலின் பாடுபொருளை ஆசிரியர் கட்டமைக்கிறார்.

**முடிவுரை**

முல்லைத்திணைப் பாடிய பெண்பாற் புலவா;கள் தாம் பாடிய பாடல்களின் வழியாக தாம் வாழ்ந்த சமூகத்தைப் பிரதிபலிக்கின்றனர். முல்லைத்திணைப் பாடிய புலவர்கள் எழுவர்.

முல்லைத்திணையில் மட்டும் ஏழு பெண்பாற் புலவா;கள் பாடியதாக மொத்தம் பதினாறு பாடல்கள் காணக்கிடைக்கின்றன

முல்லைத்திணையின் உரிப்பொருளான ஆற்றியிருத்தலை தமது பாடல்களில் தெளிவுற எடுத்துரைத்துள்ளனர். இப்புலவர்களின் பாடுபொருள் வெளிப்படுத்தும் முறையானது விவரிக்கப்பட்டுள்ளது

இயற்கைக் காரணிகளின் துணைக்கொண்டு தமது பாடலைக் கட்டமைப்பது அல்லது இயற்கைக் காரணிகளை அவற்றை வலுப்படுத்தி (மென்மையானவற்றை வலிமையுடையதாகவும் வலிமையுள்ளவர்களை மென்தன்மையானவர்கள் ஆகவும் காட்டுதல்) பாடுபொருளை வெளிப்படுத்தும்முறையை அறிய முடிகிறது.

விருந்தினர் வருவதை காக்கைக் கரைதலைப் பாடும் புலவர் ஆற்றியிருத்தலுக்கான துவக்கத்தை காகத்தைக் கொண்டே முன்வைக்கிறார். தலைவி விருந்தளிக்கும் உரிமையுடையவள் என்பதை காக்கை முன்னறிவிப்பதும் பாடுபொருள்வெளிப்படுவதும்ஒன்றேயாகும்.

மயில்களின் செயல்கள் அவற்றை ஏற்றிக் கூறுதல் போன்றவை தன்னைத்தானே ஆற்றிக்கொள்ள பயன்படுத்தும் உத்திகள் என்றாலும் அவை கருப்பொருள்களின் துணைக்கொண்டுஎழுகிறது என்ற கேள்வி எழுகிறது. ஆயினும் தமது மனவுணர்வின் அடிப்படையில் கருப்பொருள்களை ஏற்றிக்கூறுதல் தன்னைத்தானே ஆற்றியிருத்திக்கொள்ள பயன்படுத்தும்உத்தியாகக்கொள்ளலாம்.

தமது மனவுணர்வை சூழலுடன் பொருத்திப்பார்த்து பாடுபொருளை வெளிப்படுத்துதல், கேள்வியெழுப்புதலின்வழி பாடுபொருளை வெளிப்படுத்துதல், தன்னிலை உயர்ச்சியை வெளிப்படுத்துவதின் வழி பாடுபொருளை வெளிப்படுத்துதல், பிறருடன் உரையாடுவதின் வழி பாடுபொருளை வெளிப்படுத்துதல்என பாடுபொருளைவெளிப்படுத்துவதற்கான முறைகளைப்புலவர்கள்கையாண்டுள்ளனர்.

முல்லைத்திணை பாடிய பெண்பாற் புலவர்களின் பாடுபொருளை பாடுபொருள் வெளிப்படுத்தும் முறையைப் போன்று சங்க இலக்கியம் முழுமைக்கும் புலவர்களையும் அவர்தம் பாடுபொருள் வெளிப்படுத்தும் முறையையும் ஆராய்வதின் வழி தமிழ்ச்சமூக வரலாற்றிற்கு புலவர்கள் வழங்கிய அறிவுசார்பொருண்மைகளைஅறியலாம்.

**பார்வை நூல்கள்**

1. சங்க இலக்கியத்தொகுதி. கழக வெளியீடு, சென்னை.
2. சங்க இலக்கியத் தொகுதி, நியு செஞ்சுரி வெளியீடு, சென்னை.
3. சங்க இலக்கியத் தொகுதி, கோவிலூர் மடாலய வெளியீடு, திருநெல்வேலி.